C.C 368/15
PW 1
பெயர் ஜான்பிரிட்டோ
தேதி 16.092022

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைத்து உறுதிமொழி எடுத்து 4ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் இவ்வழக்கில் புகார் மனு ஆங்கிலத்தில் அளித்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை ஆங்கிலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். இவ்வழக்கு நம்பிக்கை மோசடி சம்மந்தப்பட்ட வழக்கு என்றால் சரிதான். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட நகைகள் எந்த தேதி, ஆண்டில் அடமானம் வைக்கப்பட்டது என்றால் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. எங்களது வங்கியில் எந்த தேதியில் சம்மந்தப்பட்ட நகை சம்மந்தமாக தணிக்கை செய்யப்பட்டது என்றால் எனக்கு தேதி ஞபாகம் இல்லை. வேறு ஒரு நபரை காப்பாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் நான் புகார் கொடுதது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நகை அடகு வைத்த நபர்களுக்கு முறையாக அறிவிப்பு அனுப்பியதாக கூறியுள்ளேன். கிருஷ்ணகுமார், அழகுகுமார், ராஜலட்சுமி ஆகியோருக்க அனுப்பினோம். அதனை 3 பொட்டலங்களாக திருப்பிவிட்டனர் என்றால் சரிதான். போலி நகை என தெரிந்தால் அதை திருப்பி மீட்டலாமா என்றால் நபர்களிடம் பேசியபோது நகையை மீட்டுக்கொள்வதாக கூறினார்கள். எங்களது வங்கியில் எவ்வளவு கால இடைவெளியில் தணிக்கை செய்வோம் என்றால் 6 மாதம் அல்லது 1 வருடத்திற்குள் தணிக்கை செய்வோம். உறுப்பினர்களிடம் சந்தா தொகை வசூல் செய்யும் பழக்கம் எங்கள்வங்கியில் உண்டு. சமபவம் நடந்த தேதி 8.4.13ம் தேதி 10.30மணி ஆகும். 8.4.13 முதல் புகார் கொடுத்த தேதிக்கு முன்பு வரை ஏன் புகார் கொடுக்க காலதாமதமானது என்றால் நான் வங்கி மேலாளராக பொறுப்பு ஏற்ற பின்பு நடவடிக்கை மேற்கொண்டேன். புகார் என்ன காரணத்திற்காக ஆங்கியலத்தில் கொடுக்கப்பட்டது என்றால் எங்களது மேனேஜ்மெண்ட் உத்தரவு படி ஆங்கிலத்தில் கொடுத்தேன். புகார் மனு ஆங்கிலத்தில் எங்களது உயர் அலுவலகத்தில் தயார் செய்து கொடுக்கப்பட்டது. என்ன காரணத்திற்காக நான் புகார் கொடுத்தேன் என்றால் கிளைமேலாளராக இருந்ததால் நான் புகார் கொடுத்தேன். மேற்படி இவ்வழக்கில் புகார் கொடுப்பதற்கு உயர்அலுவலகத்திலிருந்து எனக்கு அனுமதி அளித்துள்ளார்கள் அதனை நான் போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் எனக்கு வாய்மொழி உத்தரவு தான் இடப்பட்டது. நான் எந்த தேதியில் வங்கி மேலாளராக பணியில் சேர்ந்தேன் என்றால் நினைவில் இல்லை. என் புகாரில் ரமேஷ் மற்றும் வடிவேல்நாச்சியார் ஆகியோரை ஏன் சேர்க்கவில்லை என்றால் எங்களதுமேனேஜ்மெண்ட் உத்தரவு படி புகார் கொடுத்தேன். மேற்படி இருநபர்களையும் வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக மேனேஜ்மெண்ட் உத்தரவுபடி 4ம் எதிரியையும் சேர்த்து புகார் கொடுத்துள்ளேன் என்றும் நானாக புகார்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் நகை கடன் கொடுக்கப்பட்டது என்று எனக்கு ஞபாகம் இல்லை. எந்த தேதியில் நகை கடன் முடிக்கப்பட்டது என்றும் எனக்கு ஞபாகம் இல்லை. ஏன் உடனடியாக பிரச்சனைகுரிய நகைகள் சம்மந்தமாக புகார் கொடுக்கவில்லை என்றால் தனிப்பட்ட முறையில் என்னால் புகார் கொடுக்க இயலாது என்னுடைய உயர்அலுவலக அறிவுறுத்திலின் பேரில் தான் நடடிவடிக்கை மேற்கொள்ளமுடியும். மேற்படி காலஇடைவெளியை ரமேஷ் என்பவரை காப்பாற்றுவதற்காக எடுத்துக்கொண்டோம் என்றால் சரியல்ல. காவல்நிலையத்திலிருந்து மறுவிசாரணைக்காக அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்று எனக்கு ஞபாகம் இல்லை. நான் மேற்படி வங்கி கிளையில் 6 மாதம் பணிபுரிந்தேன். அதற்கு பின்பு மதுரையில் வேலை

பார்த்தேன். இந்த வழக்கில் புகார் கொடுப்பதற்காக மேற்படி கிளையில் 6 மாதகாலம் வேலை பார்த்தேன் என்றால் சரியல்ல. நகை கடன் சம்மந்தப்பட்ட ஆவணங்களை போலிச் விசாரணையின் போது காண்பித்தேன். நகை கடன் சம்மந்தமாக எனன் என்ன ஆவணங்கள் நாங்கள் வங்கியில் பராமரிப்போம் என்றால் நகை கடன் விண்ணப்பம் பதிவேடு மட்டும் பராமரிப்போம். அன்றையதினம் நடைபெற்ற நகை கடன் நிகழ்வுகள் எங்க்ள் வங்கி சிசிடிவியில் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. பொதுவாக வங்கியில் சிசிடிவி பதிவுகள் பதிவு செய்வது வழக்கும் என்றால் சரிதான். சிசிடிவி பதிவுகளை போலிசாரிடம் கொடுக்கவில்லை. 4ம் எதிரிக்கும் இந்த வழககிற்கும்ச ம்மந்தம் இல்லை என்றாலும் மேற்கூறிய நபர்களை காப்பாற்றவேண்டும் என்ற எண்ணத்தில் நான் 4ம் எதிரி மீது சேர்த்து பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.